திருநெல்வேலி மாவட்டத்தில்தான் அதிகமாக 6 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி 27 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஏழையெளிய மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இதற்கு மேலும் அவசியம் ஏற்படின், புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கும் முன்னர் அப்பகுதியிலுள்ள மாணவ, மாணவிகளிடையே உள்ள வரவேற்பு, அப்பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை கள ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.

திரு. அ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

190—

மாணவர் விடுதி

***10620—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூன் 13]

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவினை உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

முற்பகல் 11—15

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மறைந்த அம்மா அவர்களுடைய திருவடிகளை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

எனது உளுந்தூர்பேட்டை தொகுதியில் இருக்கின்ற சரவணம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியிலே 930 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2011—2012—ல் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுத்தார்கள். அந்தப் பள்ளிக்கு 8, 10 கிராமங்களிலிருந்து வந்து மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையை அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவர்கள் நீண்ட நாட்களாக வைத்துக்கொண்டேயிருகின்றார்கள். கடந்த முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதுகூட நான் இந்தக் கோரிக்கையை வைத்திருந்தேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதை மீண்டும் பரிசீலனை செய்து, அந்த சரவணம்பாக்கம்

அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக ஒரு மாணவர் விடுதியை அமைத்துத் தர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அமைத்துக் கொடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் 60 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை 3,525 ஆகும். 2017–2018 ஆம் ஆண்டில் 3,775 மாணவ, மாணவியர்கள் விடுதியில் தங்கி பயனடைந்துள்ளனர். தற்போது 7 விடுதிகள் மட்டும் வாடகைக் கட்டடங்களிலும், இதர விடுதிகள் அரசு சொந்தக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதியில், 7 பள்ளி விடுதிகள் இயங்கி வருகின்றன. உளுந்தூர்பேட்டையில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும், யு. கீரனூரில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியும், எவனாஞ்சூர்பேட்டையில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியும் மற்றும் ஒரு மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும், திருநாவலூரில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியும் மற்றும் ஒரு மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும், பேரங்கியூரில் ஒரு மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும் செயல்பட்டு வருகின்றன. உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் திருநாவலூர் என்ற இடத்தில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி மற்றும் ஒரு மிக பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும் செயல்பட்டு வருகின்றன. எனவே, இந்தச் சூழ்நிலையில் உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

2018 ஜூன் 13]

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அனைத்து இடங்களிலும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக மாணவர் விடுதிகள் இருப்பது உண்மை. ஆனால், அவர் சொல்லியிருக்கின்ற திருநாவலூரில் ஒரு மாணவர் விடுதி இருக்கிறது. ஆக, அங்கு சரவணம்பாக்கத்தில் இருக்கின்ற மாணவர்கள் சென்று தங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கிருந்து கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர் தூரத்திலே திருநாவலூர் இருக்கிறது. ஆகவே, அந்த மாணவர்கள் அங்கு தங்கிப் பயில்வது என்பது சிரமமான காரியம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டும். என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதி, கிராமங்களை உள்ளடக்கிய பகுதி. அங்கே கிட்டத்தட்ட 19 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதிலே, நீங்கள் சொல்கிற 5 பள்ளிகளில் மட்டும்தான் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக விடுதிகள் இருக்கின்றன. மற்ற பள்ளிகளிலும் அங்கே படிக்கின்ற மாணவர்கள் அதிகம் இருக்கின்றார்கள். எனவே, அதை நீங்கள் கவனத்தில் எடுத்து, மீண்டும் பரிசீலனை செய்து, சரவணம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், உளுந்தூர்பேட்டையில் இருக்கின்ற அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2001 மாணவிகள் படிக்கின்றார்கள். அங்கேயிருக்கின்ற பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவியர் விடுதியில், 50 மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு இட ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். ஆகவே, அங்கு 2001 மாணவிகள் படிக்கின்ற காரணத்தினால் அதிகமாக மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக, கூடுதலாக 50 மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு நீங்கள் வழிவகை செய்து தருவீர்களா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்து விழுப்புரம் மாவட்டம் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடமிருந்து உரிய கருத்துருவினை பெற்று, ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையிலும், அரசின்*

நிதிநிலைக்கேற்பவும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) இருங்கள், விதி 110—ன்கீழ் அறிக்கைகள் இருக்கின்றன.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) மணப்பாறை மற்றும் திண்டிவனம் வட்டங்களில் தொழிற்பூங்காக்கள் அமைத்தல் குறித்த தொழில் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11—20

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பிரதானமாக விளங்கும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும்பொருட்டு, சாதகமான தொழில் கொள்கைகளை வகுத்து, தொழில் முனைவோர்களைத் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. அந்நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்:*

(1) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (சிப்காட்) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் உள்ள கண்ணுடையான்பட்டி, கே.பெரியபட்டி மற்றும் சத்திரப்பட்டி ஆகிய வருவாய்க் கிராமங்களில் சுமார் 1,077 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழில் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம்,